யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 06
## First Term Examination – 2020 – Grade 06

| | | | | |
|---|---|---|---|---|
| சைவசமயம் | 12 | T | I, II, III | இரண்டு மணித்தியாலம் Two Hours |
| சுட்டெண் Index No | | | | சைவசமயம் |

பகுதி - I

**பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

01. காக்கை வடிவில் சென்று அகத்தியரின் கமண்டலத்தில் அமர்ந்து சென்றவர் யார்?
 1. முருகன் 2. விநாயகர் 3. பிரம்மா 4. விஸ்ணு

02. ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் பொருளாக விளங்குபவர்
 1. சிவன் 2. பிள்ளையார் 3. முருகன் 4. வைரவர்

03. அகத்தியர் தம்முடைய கமண்டலத்தில் எந்த ஆற்று நீரை அடைத்து வைத்திருந்தார்
 1. கங்கை 21. யமுனை 3. நர்மதா 4. சரஸ்வதி

04. விநாயகர் என்ற சொல்லின் பொருள் யாது?
 1. கணங்களின் தலைவன் 2. மோசிகத்தை வாகனமாகக் கொண்டவர்
 3. விக்கினங்களைத் தீர்ப்பவர் 4. தனக்கு மேல் தலைவன் இல்லாதவர்

05. தேவர்களை தன்முன் ஆயிரம் முறை தோப்புக்கரணம் போடச் செய்தவன் யார்?
 1. இரணியன் 2. கஜமுகன் 3. இராவணன் 4. மனு

06. திருவிளக்கில் எத்தனை சுடர்கள் இருப்பது சிறந்தது
 1. ஒன்று 2. மூன்று 3. ஐந்து 4. நான்கு

07. ‘‘அரிது அரிது மானிடராகப்பிறத்தல் அரிது’’ எனக் கூறியவர் யார்?
 1. ஆறுமுகநாவலர் 2. திருவள்ளுவர் 3. ஔவையாார் 4. திலகவதியார்

08. திருநீற்றை மூன்றுகுறியாக தரித்தல் எவ்வாறு அழைக்கப்படும்
 1. உத்தூளனம் 2. திரிபுண்டரம் 3. பூசுதல் 4. பரவிப்பூசுதல்

09. தீருநீறு அணியும் போது எத்திசையில் இருந்து தரித்தல் வேண்டும்
 1. தெற்கு 2. மேற்கு 3. வடக்கு 4. தென்மேற்கு

10. நாம் உணவு உண்ணமுன் பாடப்படும் பதிகம் யாது?
 1. “அன்னம் பாலிக்கும்……” 2. “தோடுடைய செவியன்….. ”
 3. “உலகெலாம் உணர்ந்து…..” 4. “மந்திரமாவது……”

11. பாலபோதம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
 1. ஔவையார் 2. திருவள்ளுவர் 3. ஆறுமுகநாவலர் 4. சேக்கிழார்



kalvi.lk

12. தர்மபுத்திரர் செய்த யாகம் யாது?
    1. சதசண்டியாகம் 2. அஸ்வமேத யாகம் 3. ருத்திர யாகம் 4. வர்ணயாகம்

13. தேவர்களின் அரசன் யார்?
    1. பிரகஸ்பதி 2. விசுவாமித்திரர் 3. தேவேந்திரன் 4. யமன்

14. மதங்கள் பிரதானமாக வலியுறுத்தும் விடயம் யாது?
    1. பொறுமை 2. அன்பு 3. கருணை 4. தருமம்

15. சிவனுக்குரிய விரதம் யாது?
    1. திருக்கார்த்திகை 2. சிவராத்திரி 3. விநாயக சதுர்த்தி 4. நவராத்திரி

16. மாணவர்களிடம் இருக்க வேண்டிய விழுமியப் பண்பு யாது?
    1. பொறுமை 2. வஞ்சனை 3. பொறாமை 4. கோபம்

17. நாம் கொண்டாடும் பண்டிகைகளில் ஒன்று
    1. தைப்பூசம் 2. மாசிமகம் 3. நவராத்திரி 4. தைப் பொங்கல்

18. ஐப்பசி மாதத்தில் வரும் கிருஸ்ண பட்சத்தில் சதுர்த்தசி திதியில் கொண்டாடப்படும் பண்டிகை
    1. புதுவருடப்பிறப்பு 2. தீபாவளி 3. தைப் பொங்கல் 4. மகாளயம்

19. "இடரினும் தளரினும்…" எனும் பதிகத்தை பாடியவர்
    1. அப்பர் 2. சம்பந்தர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

20. சிவபெருமான் கிழப்பிராமண வடிவில் வந்து திருமணப்பந்தலில் யாரைத் தடுத்தாட் கொண்டார்
    1. மாணிக்கவாசகர் 2. சுந்தரர் 3. திருஞான சம்பந்தர் 4. திருநாவுக்கரசர்

(10 x 3 = 30 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## பகுதி – II

**முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டை வரிக்கிரமமாக எழுதி தலம், பண், பாடியவர் விபரங்களை எழுதுக
    1. ஓசை ஒலியெலாம்……….
    2. இடரினும் தளரினும்……
    3. பித்தா பிறை சூடி……
    4. உலகெலாம் உணர்ந்து…..

(16 புள்ளிகள்)

02.
    1. விநாயகருக்குரிய வேறு பெயர்கள் நான்கு தருக?
    2. விநாயகர் வழிபாடு இடம்பெறும் இடங்கள் மூன்று தருக?
    3. விநாயகரை வழிபடுவதால் கிடைக்கும் பயன்கள் நான்கு தருக?

(4+4+3 = 11 புள்ளிகள்)

03.
    1. சைவ இல்லங்களில் அன்றாடம் கடைப்பிடிக்கவேண்டிய பழக்கவழக்கங்கள் நான்கு தருக?
    2. பஞ்சபுராணம் ஓதப்படும் ஒழுங்கைத்தருக?
    3. சைவ மக்களின் விசேட தினங்கள் நான்கு தருக?

(4+4+3 = 11 புள்ளிகள்)

04.
    1. சிவ சின்னங்கள் எவை?
    2. திருநீறு அணியும் முறைகள் இரண்டும் எவை?
    3. நாம் தினம்தோறும் எமது வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய நற்பண்புகள் நான்கு தருக?

(4+4+3 = 11 புள்ளிகள்)

05.
    1. பெரியோர் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?
    2. நாம் பெரியோர் முன்னால் செய்யத்தகாத செயல்கள் நான்கு தருக?
    3. உங்கள் வீட்டில் உள்ள பெரியோருக்கு நீங்கள் செய்யும் உதவிகள் மூன்று தருக?

(4+4+3 = 11 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றில் இரண்டு பற்றி சிறு குறிப்பு வரைக
    1. பெரியோரைக் கனம் பண்ணுதல்
    2. தைப் பொங்கல்
    3. சைவ இல்லம்
    4. ஆலய வழிபாடு

(11 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page